# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No. 25/2022

| | |
|---|---|
| Deposition of witness for | : PW9 |
| Name | : செல்வம் |
| Father's / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 4th day of November 2024.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தங்காயூர் எடப்பாடியில் குடியிருந்து வருகிறேன். நான் இட்லி கடை வைத்துள்ளேன். இறந்துபோன சேகரை எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் என் கடையில் இருந்தபோது சங்ககிரி போலீசார் வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 01.03.2021ம் தேதி மாலை நான் கடைக்கு பொருட்கள் வாங்க சங்ககிரிக்கு போவதற்காக கொங்கணாபுரம் பிரிவு மேம்பாலத்தின் அருகில் சென்று கொண்டிருந்தபோது அங்கு என்னுடைய பை கீழே விழுந்துவிட்டது என்றும், நான் வண்டியை நிறுத்தி பையை எடுக்கும்போது எங்கள் ஊரைச் சேர்ந்த சதீஷ்குமார் மற்றும் பூபதி அவருடன் இருந்த வடுகுப்பட்டியைச் சேர்ந்த பிரவீன், வரதகாட்டனூரை சேர்ந்த சக்தி, சின்னகவுண்டம்பாளையத்தை சேர்ந்த பிரகாஷ்ராஜ் ஆகியோர் அங்கு இருந்தார்கள் என்றும், சதீஷ் வீட்டிற்கு மாடு வாங்க அடிக்கடி வரும் உப்புப்பாளையத்தை சேர்ந்த நாச்சிமுத்து என்பவரும் அங்கு பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது நாச்சிமுத்து அவர் மகனை முடிக்கவேண்டும் என்று சொன்னார் என்றும், அதற்கு பணம் ரூ.50000/– கொடுப்பதாக பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், பிறகு அட்வான்ஸ் தொகை கொடுத்ததாக சொன்னார் என்றும், பிறகு நாச்சிமுத்து நேரம் பார்த்து சொல்வதாக சொன்னார் என்றும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலீசாரிடம் சொல்லிவிட்டு தற்போது 1ம் எதிரி என் உறவினர் என்பதால் தற்போது எதிரிகளுக்கு சாதகமாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> – இல்லை

ஒம்/– L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.